# தகவல் INFO டுடே
THAGAVAL TODAY
Daily News
செய்தி நாளிதழ்
RNI - TNTAM24310
தமிழகம் & புதுச்சேரி

தலைமை அலுவலக முகவரி
தகவல் டுடே - நாளிதழ்
114, ஸ்ரீ ஜெய்துர்கா காம்ப்ளக்ஸ்,
சத்திரம் பேருந்து நிலையம் அருகில்,
திருச்சி - 620 002.
(0431) 4540489
91502 34586
E-Mail : thagavaltodaymail@gmail.com
Web : thagavaltoday.in

மலர்:2 ★ இதழ்: 288 ★ 14.12.2024 ★ சனிக்கிழமை ★ பக்கங்கள் 4 ★ விலை ரூ.5/- ★ திருச்சி


# தாழ்வான பகுதிகளில் மழைநீரை உடனே அகற்றுங்கள்: மாவட்ட ஆட்சியர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவு




தமிழகத்தில் 49 இடங்களில் அதிகனமழை பெய்துள்ளது. தாழ்வான பகுதிகளில் சூழ்ந்துள்ள மழைநீரை உடனே அகற்றுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டசெய்திக்குறிப்பு: வங்கக்கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு பகுதி, மன்னார் வளைகுடாவில் நிலவுவதால், தமிழகத்தின் பல மாவட்டங்களிலும் கனமழை பெய்து வருகிறது. இதுதொடர்பாக முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டது. அத்துடன், தலைமைச் செயலர் கடந்த 10ம் தேதி சென்னை மாநகராட்சி ஆணையர், காஞ்சிபுரம், திருவள்ளூர், செங்கல்பட்டுஉள்ளிட்ட 17 மாவட்ட ஆட்சியர்களுடன்காணொலிகாட்சி வாயிலாக பல அறிவுறுத்தல்களை வழங்கினார்.

கனமழை, மிக கன மழை பெற வாய்ப்பு உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கண்காணிப்பு அலுவலர்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைஎடுத்து வருகின்றனர். வருவாய், பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் கடந்த 12ம் தேதி இரவு மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் இருந்து திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மாவட்ட ஆட்சியர்களுடன் பேசி, நிலைமையை கேட்டறிந்தார். மீட்பு, நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தினார்.

கடந்த 24 மணி நேரத்தில் திருநெல்வேலி, அரியலூர், கடலூர், தென்காசி, தூத்துக்குடி, மயிலாடுதுறை, திருவாரூர், செங்கல்பட்டு, பெரம்பலூர் மாவட்டங்களில் 49 இடங்களில் 20 செ.மீ. முதல் 50 செ.மீ. வரை அதிகனமழை பெய்துள்ளது.

பூண்டி, பிச்சாட்டூர், சாத்தனூர் நீர்த்தேக்கங்களில் இருந்து கடந்த 12ம் தேதி முதல் தகுந்த முன்னெச்சரிக்கை அறிவிப்புகளுடன் உபரி நீர் திறக்கப்பட்டது. செம்பரம்பாக்கம், புழல், சேத்தியாதோப்பு ஏரிகளில் இருந்து 13ம் தேதி உபரி நீர் திறந்துவிடப்பட்டுள்ளது. பொதுவான எச்சரிக்கை நடைமுறை மூலம் வெள்ள அபாயம் குறித்து 11.75 லட்சம் பேரின் கைபேசிகளுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்பட்டுள்ளது.

அரியலூர், ராமநாதபுரம் மாவட்டங்களில் சுவர் இடிந்து விழுந்து 2 பேரும், சிவகங்கை, ராணிப்பேட்டை மாவட்டங்களில் மின்சாரம் தாக்கி 2 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்த நிலையில், சென்னையில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் முதல்வர் ஸ்டாலின் நேற்று காலை ஆய்வு மேற்கொண்டார். அப்போது, திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் மழை பாதிப்புகள், நிவாரண பணிகள் குறித்து ஆட்சியர்கள், கண்காணிப்பு அலுவலர்களிடம் காணொலி வாயிலாக கேட்டறிந்தார்.

''மக்கள் வசிக்கும் தாழ்வான பகுதிகளில் சூழ்ந்துள்ளமழைநீரைஉடனே அகற்ற வேண்டும். மக்கள் தங்குவதற்கு முகாம்களை தயார் நிலையில் வைக்க வேண்டும். அங்கு உணவு, குடிநீர், மருத்துவம் உள்ளிட்ட அனைத்து வசதிகளையும் ஏற்பாடு செய்ய வேண்டும்'' என்று அவர்களுக்கு முதல்வர் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, வருவாய்நிர்வாகஆணையர் ராஜேஷ் லக்கானி, வருவாய் துறை செயலர் அமுதா உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, இ.ஆ.ப., அவர்கள் மோகனூர் ஊராட்சி ஒன்றியம், மணப்பள்ளி ஊராட்சியில் நீர் தேக்கத்தொட்டி அமைக்கப்பட உள்ள இடத்தினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



மதுரை மாநகராட்சி மண்டலம் 2 வார்டு எண்.34 அண்ணாநகரில் புதுப்பிக்கப்பட்டுள்ள மாமன்ற உறுப்பினர் அலுவலக கட்டிடத்தை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள் திறந்து வைத்தார் அருகில் மண்டலத் தலைவர் திருமதி.சரவண புவனேஸ்வரி அவர்கள், மாமன்ற உறுப்பினர் திருமதி. ஜெ.பாண்டீஸ்வரி அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், தளவாய் ஆதிதிராவிடர் பகுதியில், அதிகளவு பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட உப்பு ஓடையினை மாண்புமிகு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் அரசு அதிகாரிகள் மற்றும் திமுக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## குகேஷூக்கு ரூ.5 கோடி பரிசு முதலமைச்சர் அறிவிப்பு



உலக செஸ் சாம்பியன் பட்டம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த குகேஷ்க்கு ரூ.5 கோடி பரிசு அறிவித்தார் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

## குரூப்2, குரூப் 4 தேர்வு பாடத்திட்டம் மாற்றப்பட்டு உள்ளதாக டி.என்.பி.எஸ்.சி., அறிவித்துள்ளது




குரூப்2, குரூப் 4 தேர்வு பாடத்திட்டம் மாற்றப்பட்டு உள்ளதாக டி.என்.பி.எஸ்.சி., அறிவித்துள்ளது

எப்படியாவது அரசு வேலையில் உட்கார்ந்துவிட வேண்டும் என்பது பலரின் கனவு.

குறிப்பாக அதிககாலியிடங்கள் அறிவிக்கப்படும் தேர்வுகளில் லட்சக்கணக்கானோர் பங்கேற்கின்றனர்.

இந் நிலையில் குரூப் 2, குரூப் 4 தேர்வுகளுக்கான பாடத்திட்டத்தை தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மாற்றி உள்ளது.

இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டு உள்ளது. அதில் கூறப்பட்டு உள்ளதாவது;

தேர்வர்களின்நலன்கருதியும்,அரசுத்துறைகளின்தேவையைக் கருத்தில் கொண்டும், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு 2 (தொகுதி 2 மற்றும் 2A பணிகள்)க்கான முதல்நிலைத் தேர்வின் பொதுத்தமிழ்மற்றும்பொதுஆங்கிலத்திற்கானபாடத்திட்டமும், ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு4 (தொகுதி4 பணிகள்)க்கான தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்விற்கான பாடத்திட்டமும் மாற்றி அமைக்கப்பட்டு https://tnpsc.gov.in/tamil/syllabus.html மற்றும் https://tnpsc.gov.in/English/syllabus.html என்ற தேர்வாணைய இணையதள பக்கங்களில் வெளியிடப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.



அரியலூர் மாவட்டம், பெரியத்திருக்கோணம் கிராமத்தில் உள்ள மருதையாற்றின் நடுவே சிக்கிகொண்டவர்களை முதல்நிலை மீட்பாளர்கள் மற்றும் தீயணைப்பு துறையினர் இணைந்து மீட்கும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டார்.




தென்காசி மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் முன்னாள் படைவீரர்கள் சிறப்பு குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ஏ.கே.கமல்கிஷோர் இ.ஆ.ப, அவர்கள் தலைமையில் நடைபெற்றது.



மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் திருக்கார்த்திகையை முன்னிட்டு, கோயில் முழுவதும் பக்தர்கள் லட்ச தீபங்கள் ஏற்றி வழிபட்டனர்..

## வேஷ்டியை மடித்து கட்டு தேங்கிய தண்ணீர் வெளியேற வழியை காட்டு



தலைமை நிருபர் "இளமுருகு" எழுதுவது:

திருச்சி மாநகராட்சிக்கு உட்பட்ட எடமலைப்பட்டி புதூரில் "அன்புநகரில்,"கன மழையால்" முழங்கால் அளவு தண்ணீர் தேங்கியுள்ள பகுதிகளை வேஷ்டியை மடித்து கட்டி தமிழ்நாடு நகராட்சி நிர்வாகத்துறை , மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் மாண்புமிகு கே.என்.நேரு அவர்கள் களம் இறங்கி நேரில் பார்வையிட்டு விரைவாக தேங்கியுள்ள நீரை வெளியேற்றிட பணிகளை மேற்கொள்ள மாநகராட்சி அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த நிகழ்வில் திருச்சி மாவட்ட கலெக்டர் எம். பிரதீப் குமார் அவர்கள்,திருச்சி மாநகராட்சி மேயர் வணக்க த்திற்குரிய அன்பழகன் அவர்கள் ,திருச்சி மாநகராட்சி ஆ ை ண ய ர் சரவணன் அவர்கள் , நகர பொறியாளர் சிவபாதம் அவர்கள், மண்டல தலைவர்கள் மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

முழங்கால் அளவு தண்ணீரில் மாண்புமிகு அமைச்சர்கே.என்.நேரு "வேஷ்டியை மடித்து கட்டி, களமிறங்கி வெள்ளம் மழை வெள்ளம் மடிய ஆவன செய்ததை அப்பகுதி பொதுமக்கள் பாராட்டினார்கள்.

## கொடைக்கானல் கீழ் மலை பகுதியில் பாலத்துக்கு கீழ் ஆண் சடலம்!

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் கீழ்மலை அருகே மூளையார் பகுதியில் உள்ள ஆற்றுப்பாலத்தில் தூக்கி தொங்கியவாறு ஆண் சடலம்

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற தாண்டிகுடி காவல் துறையினர் உடலை கைப்பற்றி உடற்கூறு ஆய்வுக்கு



அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்

இறந்தவர் யார் எந்த பகுதியை சேர்ந்தவர் என்பது குறித்து போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

திண்டுக்கல் மாவட்ட செய்தியாளர் கோடை ரஜினி...



குன்னம் தொகுதி, செந்துறை ஒன்றியம், ஈச்சங்காடு கிராமத்தில், அதிகளவு பெய்த கனமழையால் பாதிக்கப்பட்ட ரயில் நிலைய பகுதிகளை மாண்புமிகு தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் அணரணன் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு மேற்கண்டார்கள். உடன் அரசு அதிகாரிகள் மற்றும் திமுக நிர்வாகி கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்



திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், வடகாடு கிராமம், பரப்பலாறு அணையின் நீர்மட்டம் நிரம்பி விட்டது என நீர்வள ஆதாரத்துறை தெரிவித்ததின் அடிப்படையில் அணையிலிருந்து சுமார்1900 கன அடி உபரி நீர் திறக்கப்பட உள்ளதால் கரையோரங்களில் வசிக்கும் பொதுமக்கள் பாதுகாப்பாக இருக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. என ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் தெரிவித்தார்.



திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் வட்டம் பண்ணைக்காடு தாண்டிக்குடி வழியாக தருமத்துப்பட்டி பன்றிமலை மலைச்சாலையில் அமைதிச்சோலை அடுத்த 4வது வளைவில் சாலையில் பாறைகள் உருண்டு நிலச்சரிவு போக்குவரத்து பாதிப்பு

இதை உடனடியாக சரி செய்ய வேண்டுமென வாகன ஓட்டிகள் கோரிக்கை வைக்கின்றனர்.

திண்டுக்கல் மாவட்ட செய்தியாளர் கோடை ரஜினி..

## கோவையில் சூப்பர் ஸ்டார் ரஜினி பிறந்தநாள் விழா



கோவை டிசம்பர்

சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் பிறந்த நாளை முன்னிட்டு கோவை நஞ்சுண்டாபுரத்தில் உள்ள அன்புள்ள ரஜினிகாந்த் ரசிகர் நற்பணி மன்றத்தின் சார்பாக 12 .12 .2024 அன்று காலை 8:00 மணிக்கு ரஜினி மன்ற கொடியேற்றி இனிப்பு வழங்குதல் நிகழ்ச்சியும் அதனைத் தொடர்ந்து நஞ்சை அருள் மிகு ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவிலில் திரையுலக சூப்பர்ஸ்டார்ரஜினிகாந்த் அவர்கள் நீண்ட ஆயுளுடனும் தேக ஆரோக்கியத்துடனும் நீடுழி வாழ வேண்டுமென மன்றத்தின் தலைவர் வேல் முருகன் தலைமையில் கணபதி ஹோமம், சுதர்சன ஹோமம், ஆயுள் ஹோமம், போன்ற யாக பூஜைகளும் மற்றும் அம்மனுக்கு சிறப்பு பூஜை மற்றும் பிரசாதம் வழங்குதலும், அதனைத் தொடர்ந்து நஞ்சுண்டாபுரம் ஊர் பொதுமக்களுக்கு அன்னதானம் நிகழ்ச்சியும் நடைபெற்றது,

நிகழ்வில் ரஜினி மன்ற நிர்வாகிகள் ராஜேத்திரன், ரஜினி செல்வராஜ்,,பி. கு ம ா ர் சுப்பிரமணி,மல்லிஸ்வரன், தர்மராஜ்,பன்னிர்செல்வம், செ ல் வ ர ா ஜ் , சு கு மார்,மோகன், தங்க ம ணி , சு ரே ஷ் , மே ஸ் தி ரி முருகன்,பாஸ்கர்,ரஜினிகுமார்,

தனசேகர்,கருப்பு சாமி,சார மேடு ரவி, மணி கண்டன், நவநீதன்,உதயகு ம ா ர் , ஸ்டீபன்,சிவகுமார்,வேலாயுதம், அஜித்குமார்,ஷீலா, லதாமணி, சுமதி,ரேவதி, புவனேஸ்வரி, சண்முக ஆனந்தி, அமிர்தா, சத்யா, வளர்மதி, சுகந்தி, காளியம்மாள்,உட்பட மன்றத்து நிர்வாகிகளும் உறுப்பினர்களும்,ரசிகர்களும் தங்கள் குடும்பத்துடன் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.



பெரம்பலூர் மாவட்டம் குன்னம் தொகுதி, வேப்பூர் ஒன்றியம், வீரமநல்லூர் கிராமத்தில் மழையால் பாதிக்கப்பட்ட பொதுமக்கள், அரசு ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள, தற்காலிக நிவாரண முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்கு, பாய் போர்வை உடை உள்ளிட்டவைகளை, மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் வழங்கினார். உடன் அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சர்வதேச பருத்தி கவுன்சில் புதிய தர அளவீட்டு கருவி அறிமுகம்




கோவை டிச

ஜவுளித்துறையின் சிறப்பான வளர்ச்சிக்கான நவீன முன்னேற்றங்கள் மற்றும் தொழில்நுட்பங்கள் குறித்து தொழில்துறை தலைவர்கள் மற்றும் நிபுணர்கள் கலந்து கொண்ட பருத்தி தினம் 2024 நிகழ்ச்சி கோவை லீ மெரிடியன் ஓட்டல் அரங்கில் நடைபெற்றது,

சர்வதேச பருத்தி கவுன்சில் சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் நிலைத்தன்மை,தொழில் நுட்பம் மற்றும் உலகளாவிய வர்த்தகத்தில் கவனம் செலுத்துதல்,பருத்தி உற்பத்தியில் அமெரிக்க பருத்தி மற்றும் இந்திய ஜவுளித் துறையின் பங்கு ஆகியவை குறித்து விவாதிக்கப்பட்டது,

மேலும் இதில் தொழில் துறையின் வளர்ச்சி மற்றும் எதிர்கால வெற்றியை ஊக்குவிக்கும் புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவை குறித்தும் முக்கிய விவாதங்கள் இடம்பெற்றன,

முன்னதாக பருத்தி கவுன்சில் செயல்பாடுகள் குறித்த செய்தியாளர்கள் சந்திப்பில், காட்டன் யுஎஸ்ஏன் தெற்காசியா விநியோகப் பிரிவுஇயக்குனர்வில்லியம் பெட்டன்டோர்ப், சுபிமா தலைமை செயல் அதிகாரி மார்க் லெவ்கோவிட்ஸ், சர்வதேச பருத்தி கவுன்சில் பிரதிநிதி பியூஷ் நரங் மற்றும் ஹில் அண்ட் நோல்டன் இயக்குனர் இவா மரியா பில்லே ஆகியோர் தங்கள் க ரு த் து க் க ை ள முன்வைத்தனர்,

இது போன்ற கூட்டங்களால் இந்திய ஜவுளி ஆலைகளுக்கும், இது சார்ந்த நிறுவனங்களுக்கும் புதிய வாய்ப்புகளையும் வழங்கும் எனவும்,தற்போது அதிகரித்து வரும் தேவைகளுக்கு ஏற்ப நவீன தொழில் நுட்பங்களின் வரவு பயனளிப்பதாக கூறினர்,மேலும் நீளமான இழைகள் கொண்ட பருத்தி மீதான இறக்குமதி வரி நீக்கப்பட்டதன் காரணமாக உயர்தர யு.எஸ் பிமா பைபரை இந்திய ஆலைகள் எளிதில் வாங்ககூடிய நிலை உருவாகி இருக்கிறது, இ த ை ன ெ த ா ட ர்ந் து நி க ழ் ச் சி யி ல் , கா ட் ட ன் யு.எஸ்.சார்பாக புதிய தர அளவீட்டு கருவி அறிமுகம் செய்யப்பட்டது.

## ஆத்தூர் செல்போன் கடையில் திருட்டு; 2பேர் கைது



ஆத்தூர்,டிச.14_

தூத்துக்குடி மாவட்டம் வடக்கு ஆத்தூர் முஸ்லீம் பெரியத் தெருவைச் சேர்ந்த முத்து வாப்பா மகன் சித்திக் (வயது37). இவர் ஆத்தூர் மெயின் பஜாரில் பெஸ்ட் என்ற பெயரில் செல்போன் கடை நடத்தி வருகிறார். கடந்த 30_ந்தேதி இவரது கடையில் மர்ம நபர்கள் கடை கதவை உடைத்து உள்ளே புகுந்து ரூ.75ஆயிரம் மதிப்பிலான செல்போன்கள் மற்றும் உதிரி பாகங்களை திருடி சென்றனர். இது குறித்த புகாரின் பேரில் ஆத்தூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வந்தனர். இந்நிலையில் தூத்துக்குடி 3சென்ட் அந்தோணியார் புரத்தைச் சேர்ந்த ரவிக்குமார் மகன் அருண் குமார், மற்றும் 3சிறுவர்கள் கடையில் புகுந்து கைவரிசை காட்டியது தெரியவந்தது. இது தொடர்பாக ஆத்தூர்போலீசார்அருண்குமார் உள்பட2பேரை கைது செய்தனர்.அவர்களிடம் இருந்து செல்போன் மற்றும் உதிரி பாகங்கள் பறிமுதல் செய்தனர்.

இதில் தொடர்புடைய மேலும் 2பேரை தேடி வருகின்றனர்.

## புதுச்சேரி அரசு தரும் வெள்ள நிவாரணத்தை ஈவு இரக்கமில்லாமல் பிடித்தம் செய்யும் வங்கிகள்

### எம்எல்ஏ அனிபால் கென்னடி ஆவேசம்



புதுச்சேரி டிச14

புதுவை அரசால் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத்தொகையை வங்கிகள் பழைய கடனுக்காக பிடித்தம் செய்திருக்கின்றன. இது குறித்து துமுக எம்எல்ஏ அனிபால் கென்னடி செய்தியாளர்களிடம் ஆவேசமாக பேசினார்..

ரேஷன் கார்டுக்கு தலா ரூ.10 ஆயிரம் வழங்க வேண்டும் என திமுக சார்பில் முதன் முதலில் இந்த அரசுக்கு கோரிக்கை வைத்தேன்.

அந்த அளவுக்கு மக்கள் பாதிக்கபட்டிருக்கிறார்கள். ஆனால், புதுச்சேரி அரசு வெறும் ரூ.5 ஆயிரம் மட்டும் வழங்குவதாக அறிவித்தது. அதையும் பத்து நாள் கழித்து கொடுத்தது. பெண்களின் வங்கி கணக்குகளில் அந்தப் பணம் வரவு வைக்கப்பட்டு வருகிறது.

ஆனால், பல வங்கிகளில் மினிமம் பேலன்ஸ் வைத்திருக்கவில்லை என்பதற்காகவும், பழைய கடன்களுக்காகவும் அந்த பணத்தை அரசு மற்றும் தனியார் வங்கிகள் பிடித்தம் செய்து வருகின்றன.

இது ஈவு இரக்கமற்ற நடவடிக்கை. அரசு மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் எனஒருபுறம்நினைக்கிறது. மற்றொரு புறம் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள வங்கிகள் அவர்கள் பணத்தை பிடித்தம் செய்து நியாயம் கற்பிக்கின்றனர்.

உணவு உள்ளிட்ட அடிப்படை வசதிகளுக்காக இந்த புயல், மழை காலத்தில் அல்லாடும் மக்களுக்கு செய்யும் துரோகம் இதுவாகும். உடனடியாக வங்கிகள் இந்த நாசகார செயலில் இருந்து விடுபட்டு, அவரவர்களுக்கு உரிய பணத்தை வழங்க வேண்டும். இல்லையேல் புதுச்சேரி திமுக சார்பில் பெரிய அளவில் போராட்டம் நடத்தப்படும் என் ப ை த தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்

## கோவையில் அல்ட்ரா வயலட் எலக்ட்ரிக் மோட்டார் பைக் ஷோரூம் துவக்கம்



கோவை டிச

அதிவேக எலக்ட்ரிக் மோட்டார் சைக்கிள் தயாரிப்புநிறுவனமானஅல்ட்ரா வயலட்,நாடு முழுவதும் எலக்ட்ரிக் பைக் விற்பனையில் பெரும் வரவேற்பை பெற்று வருகிறது, இந்நிலையில்தமிழகத்தில்தனது இரண்டாவது விற்பனை மற்றும் அனுபவ மையத்தை கோவை அவினாசி சாலை நவ இந்தியா ப கு தி யி ல் துவங்கப்பட்டது,

புதிய மையத்தை அல்ட்ரா வயலெட் நிறுவனத்தின் நிறுவனர் மற்றும் தலைமை செயல் அதிகாரி நாராயண் சுப்ரமணியம் திறந்து வைத்தார்,தொடர்ந்து அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், கோவை நகர் மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உள்ள வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை அளிக்கும் விதமாக புதிய அனுபவ மையம் துவங்கப்பட்டு ள்ளது, மேலும் இங்கு விற்பனை, சேவை மற்றும் உதிரி பாகங்கள் விற்பனை செய்யப்பட உள்ளதாகவும்,

கோவையின் மையப் ப கு தி யி ல் திறக்கப்பட்டுள்ள இந்த மையத்திற்கு வரும் வாடிக்கையாளர்கள் அல்ட்ரா வயலட்டின் முதன்மையான உ ய ர் செயல்திறன் மோட்டார் சைக்கிளான எப்77 மேக் 2 குறித்து அறிந்து கொள்வதோடு அதன் சிறப்பம்சங்கள் குறித்தும் தெரிந்து கொள்ளலாம்,இங்கு பேட்டரியை வேகமாக சார்ஜ் செய்யும் பாஸ்ட் சார்ஜிங் வசதியும் உள்ளது என்று தெரிவித்தார்.



# நாகப்பட்டினம் கீழ்வேளூர் ஊராட்சியில் நூலகம் அடிக்கல் நாட்டு விழா

## நாகை மாலி எம்எல்ஏ தொடங்கி வைத்தார்



நாகப்பட்டினம் டிச14 உங்கள் தொகுதியில் முதல்வர் " திட்டத்தின் கீழ் வேளூர் பேரூராட்சியில் ஒரு கோடியே 8 லட்சம் ரூபாயில் கட்டப்படவிருக்கும் நூலகத்திற்கான அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.. இதில் கம்யூனிஸ்ட் கட்சியை சார்ந்த கீழ்வேளூர் எம்எல்ஏ நாகை மாலி கலந்து கொண்டு அடிக்கல் நாட்டினார்..

இந்த நிகழ்ச்சியில் திமுக கீழ்வேளூர் பேரூராட்சி தலைவர் மற்றும் CPIM கீழ்வேளூர் ஒன்றிய செயலாளர் அபூபக்கர் மாவட்ட செயற்குழு உறுப்பினர் வடிவேல் சட்டமன்ற அலுவலக செயலாளர் புகழேந்தி மாவட்ட நூலக அலுவலர் மற்றும் அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

# போடி மெட்டு மலைச் சாலையில் பாறைகள் சரிவு



தேனி தமிழக கேரள எல்லையான போடி மெட்டு மலைச்சாலையின் 11ஆவது கொண்டை ஊசி வளைவில் பாறைச் சரிவு ஏற்பட்டுள்ளது

பாறைச்சரிவால் இருசக்கர வாகனங்கள், கனரக வாகனங்கள் செல்ல முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது போடி மெட்டு பகுதியில் விழுந்த ராட்சத பாறைகளை அகற்றும் பணியில் நெடுஞ்சாலை துறையினர் தீவிரம் காட்டி வருகிறது



மதுரை மாநகராட்சி மண்டலம் 1 வார்டு எண்.16 கிருஷ்ணாபுரம் காலனி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிதாக கட்டப்பட்டுள்ள கூடுதல் வகுப்பறை கட்டிடத்தை மாண்புமிகு மேயர் திருமதி.இந்திராணி பொன்வசந்த் அவர்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார் அருகில் துணை மேயர் திரு.தி.நாகராஜன் அவர்கள், கல்விக்குழுத் தலைவர் திரு.ரவிச்சந்திரன் அவர்கள், கல்வி அலுவலர் திரு.ரகுபதி அவர்கள், உதவி ஆணையாளர் திரு.பார்த்தசாரதி அவர்கள், மாமன்ற உறுப்பினர் திரு.ஜெயராஜ் அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



மதுரை அருகே உள்ள யா.ஒத்தக்கடையில், வணிகர் நலச் சங்கம் சார்பில், யானைமலையான் வணிகர் நலச் சங்கம் யா.ஒத்தக்கடை சுற்றுவட்டார பகுதிகள் சங்கத்தின் திறப்பு விழா (டிச.12) நடைபெற்றது. சங்கத்தின் கொடியை திமுக கிழக்கு ஒன்றியச் செயலாளர் அ.பா.ரகுபதி ஏற்றி துவக்கி வைத்தார். இதில், ஒத்தக்கடை ஊராட்சி மன்றத் தலைவர் முருகேஸ்வரி சரவணன், கொடிக்குளம் ஊராட்சி மன்றத் தலைவர் திருப்பதி, சங்கத்தின் தலைவர் ரஹ்மத்துல்லா, செயலாளர் கதிரவன், பொருளாளர் நாகராஜன், உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# மெட்ராஸ் உயர்நீதிமன்றத்தில் பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்து நீதி தேவதையின் கண்கள் திறக்கும் வழக்கறிஞர் அ. பாஸ்கரன்



பல ஆண்டுகளாக ஓய்வூதியம் கிடைக்காமல் திணறிக் கிடக்கும் துப்புரவு பணியாளர்களுக்கு நீதி பெற்று தந்த நீதிமான் வழக்கறிஞர் அ.பாஸ்கருக்கு குவியும் பாராட்டுக்கள் குறிப்பாக எந்த துறையில் பணியாற்றினாலும்வயதுமுதிர்வின் காரணமாக அத்துறையில் இருந்து ஓய்வு பெறுவார்கள் ஓய்வு பெற்ற பின் ஓய்வூதியம் என்று அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் இதை நம்பி தான் அவர்கள் வயதான காலத்தில் பெற்ற பிள்ளைகள் உறவினர்கள் விட்டு சென்றாலும் இதில்வரும்பணத்தைவைத்து தாங்கள் இறுதி காலத்தில் மிகவும் உதவிகரமாக இருக்கும் ஆனால்சிலஅரசுநிறுவனங்கள் தனியார் நிறுவனங்கள் இதை செய்வதே இல்லை நடைமுறைப்படுத்துவதும் இல்லை. வயதான காலத்தில் நீதிமன்றங்களில் வழக்குகளை தொடர் முடியாத அவநிலைக்கு அவர்கள் தள்ளப்படுகின்றார்கள் அதைப் புரிந்து கொண்டு அவர்கள் சிரமத்தை அறிந்து கொண்ட மெட்ராஸ் உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அ. பாஸ்கரன் வழக்கு தொடர்ந்து அரசாணை 101 & 71ன் படி நியமனம் செய்யப்பட்டவர்கள் மூன்று ஆண்டுகள் தொகுப்பூதியம் நிறைவு செய்த நாள் பணி வரன்முறை செய்ய வேண்டும் ஆனால் 2006ல் பணி வரன்முறை செய்யப்பட்ட உத்தரவை ரத்து செய்து மூன்று ஆண்டுகள் தொகுப்பூதியம் நிறைவு செய்த நாள் முதல் பணி வரன்முறை மற்றும் பணப்பலன்கள் வழங்க வேண்டும் என்ற வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது கூறி அரசாணை படி ஏற்கெனவே பணியாற்றி ஓய்வு பெற்ற துப்பரவு பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்காமல் அலுவலர்களை நம்பி நடையா நடந்தது தான் மிச்சம்.

நாம் மட்டுமே செலவு செய்து தீர்ப்பு வாங்கி விட்டால் நம்ம பேரை சொல்லி அவன் செலவு செய்யாமல் பென்ஷன் வாங்கி விடுவான் என்னிக்கு ஆனாலும் பென்ஷன் தர வேண்டியது அவர்கள் தலையெழுத்து அரசாங்கமே என்னிக்கு ஆனாலும் பென்ஷன் தந்து தான் ஆகவேண்டும் ஏன் நாம் செலவு செய்வானே என்று பேசி பேசி ஆறு வருடங்கள் கழித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் அதில் அரசாணை எண் 101 & 71 ன் படி பணி செய்த ஓய்வு பெற்ற பிறகு எங்கள் போல் பணி வரன்முறை செய்யப்பட வேண்டும் என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்று எங்களுடைய ஓய்வூதியம் வழங்காமல் இருப்பது தவறு என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து வெற்றி பெற்றதில் எட்டு ஆண்டுகள் கழித்து எட்டு வருட பென்ஷன் தொகை மொத்தமாக வழங்கினார்கள்.

வழக்கறிஞர் அ. பாஸ்கரன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து கொள்கிறோம்.

### தென்காசி மாவட்டத்தில்

# மழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோர் நேரில் ஆய்வு



தென்காசி மாவட்டம் குற்றாலம் பகுதிகளில் (13.12.2024) வெள்ள தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திரு.சங்கர். இ.ஆ.ப. அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ஏ.கே.கமல்கிஷோர் ,இ.ஆ.ப,அவர்கள் ஆகியோர்நேரில்பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

மேலும், தென்காசி மாவட்டம் குற்றாலம் கலைவாணர் அரங்கத்தில் மழையினால் பாதிக்கப்பட்டு தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சந்தித்து குறைகளை கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து தென்காசி மலையான் தெருவில் கனமழையினால் பாதிக்கப்பட்டு சமுதாய நலக்கூடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் சந்தித்து நிவாரணப் பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு. சீ.ஜெயச்சந்திரன், தென்காசி நகர்மன்ற தலைவர் திரு.ஆர்.சாதிர் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருச்செந்தூர் அமலி நகர் மீனவர்களின் கோரிக்கை நிறைவேற்றப்படுமா..?

## திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி த.வெ.க.பொறுப்பாளர் விஜய் ஆனந்த் வலியுறுத்தல்



திருச்செந்தூர்,டிச.14_

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அமலி நகர் மீனவ மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றி தர தமிழக அரசு முன்வரவேண்டும் என தூத்துக்குடி தெற்கு மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் விஜய் ஆனந்த் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக தூத்துக்குடி மாவட்ட த.வெ.க. பொறுப்பாளர் சஜி ஒப்புதலுடன் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அமலி நகர் மீனவ கிராமத்தில் தூண்டில் வளைவு முறையாக அமைத்து தர வலியுறுத்தி, கடந்த பல நாட்களாக போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.இந்த நிலையில் கடந்த 10_ந்தேதி சுமார் 200க்கும் மேற்பட்ட மீனவர்கள், பெண்கள் கோரிக்கைகளை வலியுறுத்தி கடலில் இறங்கி கருப்புகொடி ஏந்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அமலிநகர் கடற்கரை பகுதியில் 58 கோடி ரூபாய் மதிப்பில் தூண்டில் வளைவு அமைக்கப்பட்டது. இது தெற்கு புறம் மட்டும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால் வடக்கு புறம் முறையாக தூண்டில் வளைவு பாலம் அமைக்கப்படாததால் ஒவ்வொரு முறையும் படகை கடலுக்குள் செலுத்தி, மீண்டும் கரைக்கு கொண்டு வருவது சிரமமாக உள்ளதாக, அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். திமுக ஆட்சியில் மக்களுக்கு சொல்வது ஒன்று ஆனால்செய்வதுவேறொன்றாகவே இருந்து வருகிறது. எனவே முழுமையாக தூண்டில் வளைவு அமைக்க வலியுறுத்தி, கருப்பு கொடி ஏந்தியும்தொடர்போராட்டத்தில் ஈடுபட்டு வரும் அமலி நகர் மீனவ மக்களுக்கு தமிழக வெற்றி கழகம் தூத்துக்குடி தெற்கு மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் என்ற முறையில் தவெக கட்சியின் சார்பில் முழு ஆதரவை தெரிவித்துக் கொள்ளும் அதே வேலையில் அமலி நகர் மீனவர்களின் கோரிக்கையை ஏற்று முறையாக மீனவர்களின் வாழ்வாதாரம் காக்கும் பொருட்டு அவர்களின் இந்த கோரிக்கையை அரசு நிறைவேற்றிதர முன்வர வேண்டும் எனவும் தமிழக வெற்றி கழகம் சார்பில் மீனவ மக்களுடன் இணைந்து வலியுறுத்துகிறோம். இவ்வாறு அதில் அவர் கூறியுள்ளார்.

# தனிஷ்க் ஈரோடு மாநகரில் தனது கிளையை புதுப்பித்து புதுப்பொலிவுடன் தொடங்கியது



ஈரோடு டாடா குழுமத்தின் ஒரு அங்கமான தனிஷ்க் ஈரோட்டில் புத்தம் புதிய தோற்றத்துடன் விற்பனை நிலையத்தை டைட்டன் கம்பெனி லிமிடெட்டின் கஸ்டமர் சர்வீஸ் மற்றும் ரீடெய்லிங் பிரிவு தலைவரான அன்பழகன் திறந்து வைத்தார் . மேலும் அவர் பத்திரிகையாளர் சந்திப்பில் கூறியதாவது இந்த கிளை 9000 சதுர அடி பரப்பளவில் பிரம்மாண்டமான விற்பனை நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இங்கு தனிஷ்கின் பிரத்தியோக வடிவமைப்புகளான சோழா, அர்ப்பணம், நகாஷி தங்க நெக்லஸ் தொகுப்பு, தென் இந்திய கண்ணாடி குந்தன், க்ளாம்டேய்ஸ் நகைத் தொகுப்பு, ரிவா, திருமண வைபவங்களுக்கான பிரத்தியோக நகைகள் போன்ற 5000க்கும் அதிகமான எண்ணிக்கையில் தனித்துவமாக வடிவமைப்புகள் பிரமிக்க வைக்கும் ஒற்றை வைர சாலிடர்கள், துடிப்பான ரத்தின கற்கள் பண்டிகை கால பிரத்யோக நகைகள் சிறப்பு ஆபரணங்கள் மற்றும் பல்வேறு வகையான ஆபரணங்கள் விற்பனைக்கு உள்ளன மேலும் வைரத்தின் பிரதிபலிப்பை எடுத்துக்காட்டுவதற்காக டாட்டா குழுமத்தின் புதிய கண்டுபிடிப்பு இயந்திரம் தற்பொழுது முக்கியமான நகரங்களில் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. டாடா குழுமம் தங்கம் மற்றும் வைரங்களுக்கு தரத்திற்கு உத்தரவாதம் 20 வருடங்களுக்கு மேலாக இந்தியர்களின் நட்பெயர் பெற்று திகழ்கிறது என கூறினார்.

இந்நிகழ்ச்சியில் ஏரியா பிசினஸ் மேனேஜர் வினித் மௌன குரு சாமி, ராஜசேகரன், செந்தில், முக்கிய நிர்வாகிகள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.



ஆந்திரா மாநிலம் அம்மா பள்ளி டேமில் தண்ணீர் திரும்பி இருப்பதால் டேம் திறக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக தமிழ்நாடு கொசஸ் தலை ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது இந்த வெள்ளமானது கிழ் கால் பட்டடை தரை பாலத்தின் மீது வெள்ளம் செல்வதால் அந்த வழியாக வாகனங்கள் செல்லவும் பொதுமக்கள் செல்லவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.மேலும்போக்குவரத்தைமாற்றுபாதையில்அனுமதித்துள்ளனர் பள்ளிப்பட்டு சப் இன்ஸ்பெக்டர் ரமேஷ் குமார் தலைமையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்

# தடுப்பு சுவரில் அரசு பஸ் மோதி விபத்து

## பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்




மதுரை உத்தங்குடி சாலை அரசு நடுநிலைப்பள்ளி அருகே தடுப்பு சுவரில் அரசு பஸ் மோதி விபத்துக்குள்ளானது. இதில் பயணிகள் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

மதுரைபெரியார்பேருந்து நிலையத்திலிருந்து திருவாதவூர் பஸ் ஒன்று சென்றது. அரசுப் பேருந்து உத்தங்குடி அருகே மெதுவாக சென்று கொண்டிருந்தது. அப்போது டிரைவர் பிரேக்கை அழுத்தியபோது, பிரேக் பிடிக்கவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் கட்டுப்பாட்டை இழந்த பஸ் நிலைத்தடுமாறி சென்றது.

இதனால் பஸ்சில் இருந்த பயணிகள் பயத்தில் கூச்சலிட்டனர். உடனே சுதாரித்த டிரைவர் பஸ்சை சாலையோரம் இருந்த அணுகு சாலையில் திருப்பினார். இந்த நிலையில் பஸ் சாலையோரம் உள்ள தடுப்பு சுவற்றில் மோதி நின்றது. இதனால் பெரும் விபத்து தடுக்கப்பட்டது. பயணிகள் மற்றும் இதர வாகன ஓட்டிகளுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. பின் போக்குவரத்து போலீசார் உதவியுடன் இழுவை வாகனம் கொண்டு வந்து பஸ்சை அங்கிருந்து எடுத்து செல்லப்பட்டதாக கூறப்படுகிறது. இச்சம்பவத்தால் உத்தங்குடி பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

### புலிக்கரையில்

# கருக்காத்த நாயகி உடனமைந்த முல்லைவண்ணநாதர் கோயில் கும்பாபிஷேகம் விழா



தர்மபுரி மாவட்டம், தர்மபுரி அருகே புலிக்கரை கிராமத்தில் எழுந்தருளியுள்ள அருள்மிகு கருக்காத்த நாயகி உடனமைந்த முல்லைவண்ணநாதர் மகா கும்பாபிஷேக விழா இன்று வெகுவிமர்சையாக நடைப்பெற்றது.

இந்த விழாவானது நேற்று முன்தினம் கணபதி பூஜை மற்றும் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

முக்கிய நாளான இன்று அதிகாலை கலச ஆராதனை, நவகிரக ஹோமம், பஞ்ச சூக்தஹோமம், துர்கா சகஸ்ரநாமம், மகா சாந்தி ஹோமம், வேதபாராயணம், மற்றும் நான்கு கால வேள்வி பூஜையுடன்,

ரக்ஷாபந்தன, நாடிசந்தனம், செய்யப்பட்டு பூர்ணாஹுதி நடைப்பெற்றது.

இதையடுத்து யாகசாலையிலிருந்து புனிதநீர் கலச தீர்த்தம் எடுத்து சென்று கோயில் உச்சியில் உள்ள சிவலிங்கத்திற்கு புனித நீர் ஊற்றி மஹா கும்பாபிஷேகம் செய்தனர்.

பின்னர் கலசத்திற்கு ஊற்றிய புனித நீர் பக்தர்கள் மீது தெளிக்கப்பட்டது. இதனையடுத்து ஸ்ரீ முனியப்ப சுவாமிக்கு பல்வேறு அபிஷேகங்கள் செய்யப்பட்டு, பூக்களால் அலங்கரித்து மகா தீபாரதனை காட்டப்பட்டது. சுவாமி சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

இந்த விழாவில் ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். இந்தவிழாவையொட்டி பக்தர்கள் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை ஊர் பொதுமக்கள் , பூசாரி கிருஷ்ணன் மற்றும் விழாகுழுவினர், செய்திருந்தனர்.

### அனுகிரகா கலை கல்லூரியில்

# மாணவர்களுக்கு மூன்று நாள் வேலை வாய்ப்புக்கான நேர்காணல் பயிற்சி



திண்டுக்கல் மாவட்டம், நொச்சியொடைப்பட்டியில் உள்ள அனுகிரகா கலை கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு மூன்று நாள் வேலை வாய்ப்பிற்கான நேர்காணல் பயிற்சி வழங்கப்பட்டது. இப்ப பயிற்சியில் 200 மாணவர்கள் பங்கு பெற்று பயன் பெற்றனர். கோயம்புத்தூரில் அமைந்துள்ள மேஜிக் பஸ் பவுண்டேஷன் நிறுவனத்தின் பயிற்சியாளர்கள் பாபு மற்றும் மருதுபாண்டி ஆகியோர் மாணவர்களுக்கு நேர்முகத் தேர்வினை எதிர்கொள்ளும் முறை மற்றும் குழு உரையாடலில் பங்கு பெறும் முறையினை கற்றுக் கொடுத்தார்கள். பயிற்சியின் துவக்க விழாவிற்கு கல்லூரியின் துணை முதல்வர் அருட்திரு மரிய ஜோசப் லூயிஸ் பங்கு பெற்று மாணவர்களை பயிற்சியில் பயன் பெறும்படி ஊக்குவித்தார்.

கல்லூரியின் வேலை வாய்ப்பு பயிற்று அலுவலர் பேராசிரியர் வில்லியம் பயிற்சியினை ஏற்பாடு செய்திருந்தார். சமூக பணித்துறை மாணவர்கள் நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைப்பார்கள்.



பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த மாதாந்திர ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்றது. உடன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி ரெ.கார்த்திகா, மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு நல அலுவலர் திரு. எஸ்.ஸ்ரீமுரளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

### பாலக்கோடு பேருந்து நிலையம் முன்பு

## டிடிவி தினகரன் பிறந்த நாள் விழா

### இனிப்பு வழங்கி கொண்டாட்டம்

தர்மபுரி மாவட்டம் பாலக்கோடு பேருந்து நிலையம் முன்பு அம்மா மக்கள் முன்னேற்ற கழக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் அவர்களின் 61வது பிறந்த நாள் விழா நகர செயலாளர் ஞானம் தலைமையில் நடைபெற்றது.



சிறுபான்மையினர் பிரிவு மாவட்ட செயலாளர் மசிவுல்லா, விவசாய அணி சண்முகம், அவைத்தலைவர் எக்பால், லட்சுமணன், மாரியப்பன், பெலதை உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் பேருந்து நிலையம் முன்பு உள்ள அமமுக கட்சி கொடி ஏற்றி பட்டாசு வெடித் வ இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

இந்த நிகழ்ச்சியில் நகர இணை செயலாளர் மகேந்திரன், துரைசாமி, நவாஸ் கான், கவுசி, நயாஸ் கான், குமார், சுபான், வடிவேல், ரங்கநாதன், கன்னியப்பன், எல்லப்பன், நாகராஜ மற்றும் கிளை கழக நிர்வாகிகள், தொண்டர்கள், பொதுமக்கள் என திரளாக கலந்து கொண்டனர்.

## எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி' எனும் தலைப்பில் தூய்மைப்படுத்த தலைமை ஆசிரியரிடம் அனுமதிக் கோரி முன்னாள் மாணவர்கள் மனு

பள்ளி வளாகத்தை தூய்மையாக வைத்திருக்க முன்வர வேண்டும் என (20032005 ம் ஆண்டு) படித்த முன்னாள் அரசுப் பள்ளி மாணவ மாணவிகள் விழா நடத்த திட்டம் இட்டுள்ளனர்.



மதுரை மாவட்டம், கிழக்கு ஒன்றியம் யா.ஒத்தக்கடையில் உள்ள ஊராட்சி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில், 'எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி' எனும் தலைப்பில் (2003 05 ம் ஆண்டு முன்னாள் படித்து முடித்த மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களை சந்தித்து, அரசுப் பள்ளி வளாகத்தை சுத்தப்படுத்தும் நிகழ்ச்சி நிரல் (டிச.29) நடத்த முடிவு செய்துள்ளனர். இதனைத் தொடர்ந்து ஊராட்சி மன்றத்தலைவர் முருகேஸ்வரி சரவணன் மற்றும் பள்ளி தலைமை ஆசிரியர் சரவணக்குமார் ஆகியோரிடம் அனுமதி கேட்டு முன்னாள் படித்த மாணவர்கள் பாண்டியன் மற்றும் ராஜ்குமார் ஆகியோர் மனு அளித்தனர்.

பின்னா் அவா்கள் பேசியதாவது :

'எங்கள் பள்ளி மிளிரும் பள்ளி' எனும் தலைப்பில் மூலம் மாணவ, மாணவிகளுக்கு தன் சுத்தம், பள்ளி வளாகத் தூய்மை, பள்ளியின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு விழிப்புணா்வு பெறுதல், கழிவு மேலாண்மை முறைகளை அறிந்து கொள்ளுதல், மறுசுழற்சி முறைகளின் முக்கியத்துவத்தை உணா்தல், நெகிழி பயன்பாட்டை குறைத்து இயற்கைக்கு உகந்த மாற்றுப் பொருள்களை பயன்படுத்துவது குறித்த ஊக்கமூட்டும் நடவடிக்கைகள் ஆகியன குறித்து விழிப்புணா்வு நிகழ்ச்சி நடத்த உள்ளோம். இதனைத் தொடர்ந்து முன்னாள் மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் சந்தித்து விழா நடத்தவும் முடிவு செய்து உள்ளோம்.

இந்தத் திட்டத்தின் கீழ் ஆசிரியா் அறைகள், ஆய்வகம், வகுப்பறைகள் உள்பட இதர அறைகளில் தேக்கமடைந்துள்ள தேவையற்ற பொருள்கள், காகிதங்களை அகற்றம் செய்தல், பள்ளி வளாகத்தில் சேரும் குப்பைகளை எந்தக் காரணம் கொண்டும் எரிக்காமல் துப்புரவு பணியாளர்களிடம் வழங்குதல், தாழ்நிலை, மேல்நிலை நீா் தேக்கத் தொட்டிகளை முறையாக தூய்மை செய்தல். ஆசிரியருக்கு மரியாதை செலுத்துதல், மரம் நடுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சி நிரல் நடத்த உள்ளோம். இதற்கு முழுமையாக ஒத்தக்கடை ஊராட்சி மன்றத் தலைவர் முருகேஸ்வரி சரவணன், பள்ளி தலைமை ஆசிரியர் சரவணக்குமார், ஆசிரியர்கள் மற்றும் முன்னாள் மாணவ மாணவிகள் ஒத்துழைப்பு அளித்துள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

### தூத்துக்குடி மாவட்டத்திற்கு ரெட் அலர்ட்

## திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கோவிலுக்கு வரும் பக்தர்கள் கடற்கரையில் தங்குவதை தவிர்க்குமாறு தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக அறிவுறுத்தப்படுகிறது

தூத்துக்குடி மாவட்டத்திற்கு ரெட் அலர்ட் விடப்பட்டு மாவட்டம் முழுவதும் கனமழை பெய்யும் சூழல் உள்ளதால் திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு கோவிலுக்கு வரும் பக்தர்கள் கடற்கரையில் தங்குவதை தவிர்க்குமாறு தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக அறிவுறுத்தப்படுகிறது.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் மாதம் தோறும் பௌர்ணமி தினத்தை முன்னிட்டு லட்சக்கணக்காக பக்தர்கள் திருச்செந்தூர் கடற்கரையில் தங்கி தரிசனம் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் தூத்துக்குடியில் காயல்பட்டினம் சுற்று வட்டார பகுதியில் 105 மில்லி மீட்டர் மற்றும் திருச்செந்தூர் சுற்றுவட்டார பகுதியில் 41 மில்லி மீட்டர் மழை பொழிவும் பதிவாகியுள்ளது. மேலும் வானிலை ஆய்வு மையம் தூத்துக்குடி மாவட்டத்திற்கு ரெட் அலர்ட் விடப்பட்டுள்ளதால் தொடர்ந்து கனமழை பெய்யும் சூழல் உள்ளது.

எனவே பௌர்ணமி தினத்தை முன்னிட்டு திருச்செந்தூர் கோவில் கடற்கரைபகுதிகளில்பக்தர்கள்தங்குவதை தவிர்க்குமாறு தூத்துக்குடி மாவட்ட காவல்துறை சார்பாக அறிவுறுத்தப்படுகிறது.





அரியலூர் மாவட்டம் T பழூர் ஒன்றியம் அம்பாபூர் ஊராட்சியில் காங்கேயன்பேட்டை உள்ள பயணிகள் நிழற்குடை மிக மோசமான நிலையில் இருக்கிறது தினம்தோறும் அந்த வழியாக மாணவிகள் மாணவர்கள் பொதுமக்கள் நிழற்குடை உட்கார்ந்து சென்று போய் வருவார்கள் இப்பொழுது மழைக்காலம் தொடங்கி விட்டது அந்த பேருந்து நிலையம் மிக மோசமான நிலைமையில் இருக்கிறது எப்பொழுது நாளும் இடிந்து உடையும் நிலைமையில் இருக்கிறது உடனடியாக அதை உடைத்து புதிய நிகற்குடை கட்டித் தர வேண்டும் என்று வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுக்கு இந்திய ஜனநாயக வாலிபர் சங்கத்தின் சார்பாக கேட்டுக்கொள்கிறோம

### அண்ணாமலையாருக்கு அரோகரா'

## திருவண்ணாமலையில் ஏற்றப்பட்டது மகாதீபம்

### பரவசத்தில் பக்தர்கள்




கார்த்திகை தீபத் திருவிழாவையொட்டி திருவண்ணாமலையில் 2,668 அடி உயரமுள்ள மலையின் உச்சியில் இன்று மாலை 6 மணிக்கு மகா தீபம் ஏற்றப்பட்டது. ஜோதி வடிவமாக அண்ணாமலையார் காட்சியளிக்கிறார். முன்னதாக மலை அடிவாரத்தில், அண்ணாமலையார் ஆனந்த தாண்டவம் ஆடி பக்தர்களுக்கு காட்சியளித்ததை தொடர்ந்து, கீழே தீபம் ஏற்றப்பட்டது.

கார்த்திகை தீபம் திருவிழா கார்த்திகை மாதம் என்றாலே அனைவரது நினைவுக்கும் முதலில் வருவது கார்த்திகை தீபத்திருவிழாவே ஆகும். கார்த்திகை தீபத் திருவிழா தமிழ்நாட்டிலே சிவபெருமானின் பஞ்சபூத தலங்களில் ஒன்றான திருவண்ணாமலையில் கோலாகலமாக கொண்டாடப்படுவது வழக்கம் ஆகும்.

முன்னதாக இன்று காலை பரணி தீபம் ஏற்றப்பட்டது. மகாதீபம் காண வந்துள்ள லட்சக்கணக்கான பக்தர்களின் வருகையால் திருவண்ணாமலை விழாக்கோலம் பூண்டுள்ளது.

பாதுகாப்பு பணியில் போலீஸ் மகாதீபத்தைக் காண வரும் கூட்டத்தில் சிக்கி சிறுவர்கள் காணாமல் போனால், அவர்களின் பெற்றோரை உடனடியாக கண்டறியும் வகையில், சிறுவர்கள் கையில், பெற்றோரின் தொலைபேசி எண், காவல் துறையினரின் உதவி எண்கள் எழுதப்பட்டு, அந்த அடையாளப்பட்டையை மகாதீபம் காண வரும் சிறுவர்களின் கைகளில் அணிவிக்கப்படுகிறது. பெற்றோர்களுக்கும் குழந்தைகளை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது தொடர்பான அறிவுரைகளை காவல்துறையினர் வழங்கி வருகின்றனர். 13,000 காவலர்கள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

புராண பின்னணி என்ன ?

புராண காலத்தில் திருமால் மற்றும் பிரம்மா ஆகிய இருவருக்கிடையே யார் பெரியவர் என போட்டி ஏற்பட்டது. இதனைத் தொடர்ந்து சிவபெருமான் அக்னி உருவெடுத்தார். யார் முதலில் தலையையும் மற்றும் அடியையும் கண்டுபிடிக்கிறார்களோ அவர்கள் பெரியவர் என சிவபெருமான் அவர்கள் முன் அசாரியாக தெரிவித்தார்.

உடனடியாக பன்றி அவதாரம் எடுத்து திருமால் அடியை காண புறப்பட்டார். பிரம்மன் முடியை காண மேல் நோக்கி புறப்பட்டார். ஆனால் இருவராலயும் அடியையும் முடியும் காண முடியவில்லை. இந்த தத்துவத்தை உணர்த்துவதற்காகவே திருக்கார்த்திகை தீபம் திருவண்ணாமலையில் ஆண்டு தோறும், கொண்டாடப்படுவதாக நம்பப்படுகிறது.



விவசாயம் செழிக்க பொதுப்பணித்துறை சார்பிலும்,குற்றங்கள் குறைய காவல்துறை சார்பிலும் வேளிமலை குமாரா சுவாமி கோவிலுக்கு திருவிதாங்கூர் மன்னர் காலத்தில் இருந்து காவடி எடுக்கப்பட்டு வருகிறது.அந்த வகையில் இன்று தக்கலை காவல் நிலையத்தில் இருந்து குமாரகோவில் முருகன் கோவிலுக்கு 'வெற்றிவேல் முருகனுக்கு அரோகரா' என கோஷம் முழங்க காவடி பவனியாகச் காவலர்கள் சென்றனர்.இதில் திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் வழிகாட்டுதலின் படி மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களின் உத்தரவின் படி திட்டக்குடி, வெளிங்கடன் ஏரியில் விவசாய பாசனத்திற்க்கா நாளை காலை (8.30 ) மணியளவில் கடலூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர்

சி.வி. கணேசன் தண்ணீர் திறந்து வைக்கிறார். அதுசமயம் திமுக கழக நிர்வாகிகள், அரசு அதிகாரிகள் விவசாய பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.



தென்காசி மாவட்டம் வீராணம் கால்வாயில் உடைப்பு ஏற்பட்டு மக்கள் வசிக்கும் பகுதியிலும் V.K.புதூர் தாயார்தோப்பு மெயின் ரோடு கூட்டுறவு வங்கி அருகில் வெள்ள நீர் கரைபுரண்டு ஓடியதை தென்காசி மாவட்ட காங்கிரஸ் கமிட்டி தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான எஸ்.பழனி_நாடார் MLA அவர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பார்வையிட்டார்கள்.அவர்கள் உடன் மாவட்ட காங்கிரஸ் துணைத் தலைவர் பால், தெய்வேந்திரன், மாவட்ட வர்த்தக காங்கிரஸ் தலைவர் தாயார்தோப்பு M.S.இராமர்,தி.மு.க,வெங்கடேஷ் அழகையா,சமூக ஆர்வலர் தினேஷ், பிரபாகர்,அரவிந்த் ஆகியோர் பார்வையிட்டனர்

### திட்டக்குடி அருகே கீழச்செருவாய் கிராமத்தில்

## வெலிங்டன் ஏரி நீர் தேக்கத்தை அமைச்சர் கணேசன் பார்வையிட்டார்

கடலூர் மாவட்டம் திட்டக்குடி அடுத்த கீழசெருவாய் கிராமத்தில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான வெலிங்டன் ஏரி நீர் தேக்கம் அமைந்துள்ளது,



தமிழக முழுவதும் வடகிழக்கு பருவமழை தீவிரம் அடைந்த நிலையில், கடந்த சில தினங்களாக ஏரிக்கு நீர்வரத்து அதிகம் வந்ததால், ஏரி முழு கொள்ளளவை எட்டி உள்ளது,

இதனை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆய்வு செய்தார். தொடர்ந்து கீழ்சசெருவாய் கிராமத்தில் வந்தபோது,

அமைச்சரின் காரை வழிமறித்த கிழச்செருவாய் பொது மக்கள், தங்கள் பகுதியில் சாலை வசதி, கால்வாய் வசதி, உள்ளிட்ட எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை எனவும், தங்களிடம் பலமுறை தெரிவித்தும், இதுவரை எந்த பயனும் இல்லை என்றும்,

தற்போது பெய்து வரும் பருவமழை காரணமாக, மழைநீர் குளம்போல் தேங்கிநிற்பதால், குடிநீருடன் சாக்கடை நீர் கலந்து வருவதால் நோய் தொற்று பரவும் அபாய நிலையில் தங்கள் பகுதி மக்கள் வாழ்ந்து கொண்டிருப்பதால் கூறி அமைச்சரின் காரை முற்றுகையிட்டு வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது. அயலக அணி மாவட்ட அமைப்பாளர் சேதுராமன், கட்சியின் மாவட்ட ஒன்றிய கிளை நகர பேரூர் கழகத்தின் முக்கிய நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கொடைக்கானல் கனமழை காரணமாக திடீர் காட்டாற்று வெள்ளம்

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் தொடர்ந்து கனமழை பெய்து வருகிறது கொடைக்கானல் பள்ளங்கி கோம்பை, மூங்கில் காடு பகுதியில் காட்டாற்று வெள்ளமும் மற்ற பகுதியான வெள்ளி நீர் வீழ்ச்சி ஆறு, பெரியாற்று ஓடை, பச்சை மரத்து ஓடை, மூலையாறு போன்ற பகுதிகளிலும் கீழ் மலை பகுதியான வடகவுஞ்சி பஞ்சாயத்து உட்பட்ட செம்ரான் குளம் பகுதியில் திடீர்காட்டாற்று வெள்ளம் ஏற்பட்டது அதன் தொடர்ச்சியாக பழனி மற்றும் வத்தலகுண்டு பிரதான சாலைகளில் ஆங்காங்கே மரங்கள் மற்றும் கிளைகள் மற்றும் மண் சரிவுகள் ஏற்பட்டன இதனை உடனடியாக நெடுஞ்சாலை துறை அதிகாரிகள் மற்றும் தீயணைப்புத் துறையினர் விரைந்து சேதங்களை சரி செய்தனர் மேலும் கொடைக்கானல் நகர் பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்து வருவதால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது கொடைக்கானல் வந்த சுற்றுலா பயணிகள் வெளியில் செல்ல முடியாமல் தங்கும் விடுதியில் முடங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது சுற்றுலா பயணிகளை நம்பியுள்ள சிறு குறு வியாபாரிகள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர் கொடைக்கானல் நகர் பகுதியில் ஆங்காங்கே காட்டாற்று வெள்ளம் வீடுகளில் புகுந்து பொதுமக்கள் மிகவும் சிரமபடுகின்றனர் கொடைக்கானல் மேல்மலை மற்றும் கீழ் மலைப்பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் வாகன ஓட்டிகள் கவனத்துடன் சென்று வருவதற்கு மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தப்பட்டது மழைக் கால வெள்ள நிலை குறித்து ஏதாவது அவசர உதவி தேவைப்பட்டால் மாவட்ட நிர்வாகம் கொடுக்கப்பட்டுள்ள தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர் திருமதி மொ நா பூங்கொடி அறிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்ட செய்தியாளர் கோடைரஜினி...

## மதுரை மாவட்டம் அழகர் கோயில் பழமுதிர்ச்சோலை முருகன் கோவிலில் திருப்பழனி தைப்பூச அன்னதான சங்கம் சார்பாக அன்னதானம்






மதுரை மாவட்டம் அழகர் கோவிலில் ஆறுபடை வீடுகளில் ஒன்றான ஆறாம் படை வீடான பழமுதிர்ச்சோலையில் இன்று திருவண்ணாமலை கார்த்திகை தீப திருவிழாவை முன்னிட்டு தானத்தில் சிறந்த தானம் அன்னதானம் என்று திருப்பழனி தைப்பூச அன்னதான சங்கம் சார்பாக சுமார் 4000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இந்த அன்னதானத்தை அந்த சங்கத்தின் தலைவர் கருணாத்திரிநாதன்,

செயலாளர் சுரேஷ் மற்றும் ராம்குமார், பொருளாளர் வெங்கிடாராமன் மற்றும் மதுரை பிரஷ்னேவ் இந்தக் குழுவின் உறுப்பினர்கள் பக்தர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.

இதில் கோவிலுக்கு வந்த ஐயப்ப பக்தமார்களும் மற்றும் பொதுமக்கள் அனைவரும் இந்த அன்னதானத்தில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அரியலூர் மாவட்டம், குன்னம் சட்டமன்ற தொகுதி, செந்துறை ஒன்றியத்திற்குட்பட்ட தளவாய் ஊராட்சி மதுரா நகரில் பெய்த கனமழையின் காரணமாக ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்து மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.சா.சிவசங்கர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பொ.இரத்தினசாமி, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பலர் உள்ளனர்.